செ.வெ.எண் 28 நாள்: 17.09.2020

பெரம்பலூர் மாவட்டம்

**ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் சார்பில் சமுதாய காய்கறி தோட்டம் அமைக்கும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி வே.சாந்தா, இ.ஆ.ப. அவர்கள் தொடங்கி வைத்தார்.**

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் சார்பில் நொச்சியம் ஊராட்சி விளாமுத்தூர் அங்கன்வாடி மையம் அருகில் உள்ள பொது இடத்தில் சமுதாய அளவில் காய்கறி தோட்டம் அமைக்கும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி வே.சாந்தா, இ.ஆ.ப. அவர்கள் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் சார்பில் ஊட்டச்சத்து மாத விழா செப்டம்பர் 1 முதல் 30 வரை கொண்டாடப்படுகிறது. பெண்கள் மற்றும் குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலையினை மேம்படுத்துவதற்காக இவ்விழாவானது ஒவ்வொரு ஆண்டும் அனைத்து துறைகளின் ஒத்துழைப்போடு செயல்படுத்தப்படுகிறது.

கர்ப்பிணி பெண்கள் இரத்த சோகை போன்ற ஊட்டச்சத்து பற்றாக்குறையில் உள்ளதால் இவர்கள் பிரசவிக்கும் குழந்தைகளும் பிறப்பு எடை குறைவாகவும், முழுமையான கர்ப்ப காலத்தை கடந்து செல்ல இயலாத நிலையிலும் பிறக்கின்றனர். ஊட்டச்சத்து விழிப்புணர்வு அளிப்பதன் மூலம் இரத்தசோகை, பிறப்பு எடை குறைபாடு மற்றும் புரதச்சத்து குறைபாடு ஆகியவை குறைக்கப்படும். இரும்புச்சத்து நிறைந்த பச்சைக் காய்கறிகள் மற்றும் நாட்டுக்காய்கறிகளை வீட்டுத் தோட்டத்தின் வாயிலாக குறைந்த செலவில் உற்பத்தி செய்து பயன்படுத்தும்போது நுண்ணூட்ட சத்து குறைபாட்டை நீக்க அனைவரும் பசுமையான காய், கீரை ஆகியவற்றை உண்பது அவசியம்.

எனவே ஒவ்வொரு வீட்டிலும் குறைந்த செலவுள்ள கத்தரி, வெண்டை, பீன்ஸ், கொத்தவரை, சுரக்காய், பூசணி, பரங்கி, புடலை மற்றும் தக்காளி போன்ற காய்களையும், கீரைகளையும் விளைவித்து குடும்பத்தினருக்கு அளிப்பதன் மூலம் அவர்களுக்கு அன்றாடம் கிடைக்க வேண்டிய ஊட்டச்சத்துக்களை பெறமுடியும். எனவே அனைவரும் தங்கள் வீடுகளிலும் பொதுமக்கள் ஒன்றிணைந்து சமுதாய தோட்டத்தை அமைத்து பயன்படுத்துவதன் மூலமும் அந்த பகுதி தாய்மார்களும், குழந்தைகளும் ஆரோக்கியத்துடன் வாழ ஏதுவாக இருக்கும். எனவே அனைவரும் சமுதாய பொறுப்புடன் ஒன்றிணைந்து பெரம்பலூர் மாவட்டத்தை ஊட்டச்சத்து குறைபாடு இல்லாத மாவட்டமாக மாற்ற முயற்சிக்கவேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி வே.சாந்தா, இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர் புவனேஸ்வரி, மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சவுந்தர்யா, குழந்தை வளர்ச்சி அலுவலர் பிரேமஜெயம் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

## வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், பெரம்பலூர்